[1979 ஏப்ரல் 16

பாடபுத்தகங்களில் தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தங்கள்

* வினா எண் 704—திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் நூற்றாண்டு விழாவில் அரசு கொண்டு வந்திருக்கிற தந்தை பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தமுறை அரசு நிறுவன பாடப் புத்தகங்களில் எப்போது முதல் கடைபிடிக்கப் படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், பள்ளி கல்வி மேல்நிலை இரண்டாம் ஆண்டுக்குப் புதிதாக அச்சிட இருக்கும் அனைத்துப் பாடநூல்களிலும 1979-80 ஆம் ஆண்டு முதல் எழுத்துச் சீர் திருத்தத்தைக் கடைபிடிக்கும். மேலும் 1-1-1979க்குப் பிறகு அச்சுக்குக் கொடுக்கப்படும். புதிதாக அச்சுக்கோர்த்து அச்சு அடிக்கப்படுகிற கல்லூரிப் பாடநூல்களிலும் இம்முறையை பின் பற்றப்பட இருக்கிறது. 1 முதல் 10 வகுப்புக்கான பள்ளிப் பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரை புதிதாக அச்சுக்கோர்த்து அச்சடிக்க வேண்டிய பாடப்புத்தகங்கள் யாவும் புதிய முறைப் படி அச்சிடப்படும். உதாரணமாக 1979—80ஆம் ஆண்டிக்கு புதிதாக அச்சுக்கோர்த்து வெளியிட இருக்கிற ஆறாம் வகுப்பு தமிழ்ப் பாடநூல்களில் இம்முறையே பின்பற்றப்படும்.

திரு. செ. சிவசாமி : பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தை அமல்படுத்தியதன் மூலம் நல்லதொரு பயன் ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் 'இ' 'ஈ' என்று எழுதும் போது 'ஈ'யன்னாவுக்கு தனி எழுத்தாக எழுதாமல் 'இ'னவுக்குப் கொம்பு போட்டு 'ஈ' என்ற எழுத்தை எடுத்து விட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது அறிவிக் கப்பட்டிருக்கிற சீர்திருத்தங்களைத் தவிர மேற்கொண்டு தமிழ் எழுத்துக்களில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்ற கருத்து அரசுக்கு இருக்கிறது. ஆகவேதான் தமிழறிஞர் மகாவித்துவான் மே. வி. வேணுகோபால் பிள்ளை அவர்கள் தலைமையில் குழுவை அமைத்து மேற்கொண்டு என்னென்ன சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்பது பற்றிப் பரிசீலனை செய்து வருகிறது. அவர்கள் முடிவு செய்தவுடன் அரசு அதனைச் செயலுக்குக் கொண்டு வரும்.

1979 ஏப்ரல் 16]

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பெரியார் நூற்றாண்டு விழா நடைபெறும் இந்த ஆண்டில் 900க்கு அதிகமான மேல் நிலைப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுக்கு பெரியார் நூற்றாண்டு விழாக் கட்டிடம் என்று பெயர் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது இந்தக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது.

[முற்பகல் 9-30]

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெரியாரின் எழுத்துச் சீர்திருத்த முறை என்பதை அறிவித்திருப்பது பெரியார் இப்படி எழுதினார் என்பதற்காக அந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறதா? அல்லது அந்த சீர்திருத்த முறைக்குப் பின்னாலே ஏதாவது 'ரேஷனேல் பிகைன்ட் இட்' இருக்கிறதா? அல்லது ஆராய்ச்சி செய்யப்பட்டு இப்படித்தான் எழுத்துச் சீர்திருத்தம் இருக்கவேண்டுமென்று முடிவான அறிக்கைகள் எதாவது சமர்ப்பிக்கப்பட்டு அதன் அடிப்படையிலே, இந்த எழுத்துச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டதா? அல்லது தமிழக அகராதியை மாற்றுவதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவரவர்களே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னால் இருந்த நிலைமையில் அது சீர்திருத்தப்பட வேண்டிய ஒன்று என்பதைப் பல்வேறு அறிஞர் பெருமக்களும், தமிழறிஞர்களும், மற்றவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றுதான். தவிர, பல்வேறு வகையான கருத்துக்கள் அதாவது கடந்த காலத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்களை அடிப்படையாக வைத்துப் பேசிக்கொண்டு இருந்த நேரத்தில் அதைச் செயல்படுத்துவதற்காக தந்தை பெரியார் அவர்கள் இருந்தார்கள். இன்றைக்கு நாமும் அந்தக் குறைந்த பட்ச சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். முழுமையான சீர்திருத்தம் செய்வதற்குரிய வகையிலே ஒரு குழுவை அமைக்க இருக்கிறோம்.

திரு. அ. க. அரங்கநாதன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பெரியாருடைய சீர்திருத்த எழுத்துக்களை தனியார் பத்திரிக்கைகளிலும், வேறு பத்திரிக்கைகளிலும் சரியாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அப்படி கடைப்பிடிக்காத அந்தப் பத்திரிகைகளின் மீது அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை இப்போது இல்லை. ஆனால் நாம் எல்லா பத்திரிகைகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறோம், கேட்டுக் கொள்ளவும் செய்வோம்.

ஊராட்சி விரிவாக்க அலுவலர்கள்

* வினா எண். 705.—திரு யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேர்வுநிலைப் பேரூராட்சிகளில் முதல் நிலை நிர்வாக அதிகாரிகளில் அனுபவமிக்கவர்களை ஊராட்சி விரிவாக்க அலுவலர்களாக நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் தற்போது அத்திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்போது தேர்வு நிலைப் பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற நிர்வாக அதிகாரிகளும், முதல்நிலை பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற நிர்வாக அதிகாரிகளும் ஒரே விதமான பணியை ஆற்றிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் இத்தகைய ஒரு திட்டத்தை அரசு கொண்டுவருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஏற்கெனவே பிரமோஷன் இல்லாமல் பலர் இருக்கின்ற காரணத்தால், இதனை ஏற்படுத்தினால் ப்ரமோஷன் வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தால், இந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனைக்கு தற்போதுள்ள பணிவிதிகளில் இடம் இல்லை. ஆனால் ஊரக வளர்ச்சித்துறைக்கு ஒரே பணிவிதி அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அது ஏற்படுத்தப்பட்டதற்குப் பிறகு இதுபற்றி பரிசீலிக்கப்படலாம்.